5. அறிக்கைகள் அளித்தல் :

(அ) உரிமைக்குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுவின் அறிக்கைகளை அளித்தல்.

உரிமைக் குழுவின் அறிக்கையை அளித்தல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மற்றும் உரிமைக் குழுவின் தலைவர்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'முரசொலி' நாளிதழ் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன் :

1. 1985-86 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (வருவாய் வரவினங்கள்) உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறைத் தொடர்பான பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தி இரண்டாவது அறிக்கையை அளிக்கிறேன்.

2. 1987-88 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (அறிக்கை எண் 3/1989) (வருவாய் வரவினங்கள்) உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை தொடர்பான பத்திகளின் சிறப்புக் கூறுகள் (Highlight) குறித்த பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தி மூன்றாவது அறிக்கையை அளிக்கிறேன்.